## பாசிச பா.ஜ.க.வும் துரோகம் புரியும் அ.தி.மு.க.வும் ஒருநாளும் வெல்ல முடியாது:

# தமிழ் மக்களின் இதயத்தைத் தொடுகின்ற கழகம் எனும் சாவியை அண்ணாவும், கலைஞரும் நம் தலைவரிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளனர்!

### சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சி உரை!

**சென்னை,ஜூலை 26-**

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்திற்கு உட்பட்ட துறைமுகம், எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளின் பி.எல்.ஏ.-2, பூத் லெவல் டிஜிட்டல் ஏஜென்ட்ஸ் மற்றும் பாக அளவிலான இளைஞர் அணியினருக்கான ஆலோசனைக் கூட்டத்தில் துணைமுதலமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமானஉதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காக்க, கழகத்தின் பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆற்ற வேண்டிய பணிகளையும், அவற்றின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். ஜனநாயகத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு பூத் கமிட்டி பொறுப்பாளர்களின் தோள்களுக்கு வந்திருக்கிறது என்பதை உணர்ந்து செயல்படுங்கள் என எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**துணைமுதலமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமானஉதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரையின் விவரம் வருமாறு:**

இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து உங்களை எல்லாம் சந்திக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு எப்போது வந்தாலும் புது உற்சாகமும், எழுச்சியும் ஏற்படும். உங்கள் ஒவ்வொருவரின் முகத்திலும் இருக்கின்ற உற்சாகம், இன்றைக்கு என்னையும் தொற்றிக்கொண்டுள்ளது. வருகின்ற வழியெங்கும் நம் கழகத்தினர், பொதுமக்கள், தாய்மார்கள், இளைஞர்கள் வரவேற்பு கொடுத்தார்கள். அதற்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது ஒன்றும் சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு புதிது கிடையாது.

தொடர்ந்து இரண்டு நாட்களாக பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுள்ளேன். நேற்று திருவள்ளூர் மாவட்டத்தில் பூந்தமல்லியில் ஒரு நிகழ்ச்சி. இன்றைக்கு இந்த நிகழ்ச்சி. வருகின்ற வழியெல்லாம் தாய்மார்கள் என் கையை பிடித்துக்கொண்டு அப்பா எப்படி இருக்காங்க, எங்க அண்ணன், தலைவர் எப்படி இருங்காங்க என்று ஒரு குடும்ப உறுப்பினர், இன்னொரு குடும்ப உறுப்பினரைக் கேட்பார்கள் அல்லவா, அந்த உணர்வை எனக்கு ஏற்படுத்தினார்கள்.

இன்று இந்த நிகழ்ச்சியின் மூலம் உங்களுக்கெல்லாம் சொல்லிக் கொள்வது, நம் தலைவர் மிகமிக நலமாக உள்ளார். மருத்துவர்கள் கொடுக்கின்ற மருத்துவத்தால் மட்டுமல்ல, இங்கு வந்திருக்கும் உங்களின் பேரன்பினால் நம் தலைவர் அவர்கள் இன்னும் 2 நாட்களில் வீடு திரும்புவார் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மருத்துவமனையில் இருந்தே பணி

இன்னொன்று சொல்லட்டுமா? இன்று இந்த நிகழ்ச்சியில் தலைவர் இல்லை என்றாலும், இந்த நிகழ்ச்சியை தொலைகாட்சியில் பார்த்துக் கொண்டிருந்தாலும், பார்த்துக் கொண்டு இருப்பார். நேற்று முன்தினமே அவரின் அலுவல் வேலைகளை எல்லாம் ஆரம்பித்து விட்டார். நீங்கள் பார்த்திருப்பீர்கள். மருத்துவமனையில் இருந்தால்கூட அரசு தலைமைச் செயலாளர் களை எல்லாம் வரச்சொல்லி, ‘உங்களுடன் ஸ்டாலின்’ பணிகள் எல்லாம் எப்படி சென்றுக் கொண்டு இருக்கிறது என்று கேட்டு, மருத்துவமனையில் இருந்தே பணி செய்கின்ற முதலமைச்சர் யார் என்றால், நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள்தான்.

பொதுவாக, சென்னை கிழக்கு மாவட்டம் என்றாலே பிரமாண்டத்திற்கு பெயர்போன மாவட்டம், அண்ணன் சேகர்பாபு அவர்கள், 100 பேருக்கு நலத்திட்டம் கொடுக்கச் சொன்னால்கூட, அதை ஒரு மாபெரும் நிகழ்ச்சியாக நடத்தக்கூடியவர் அண்ணன் சேகர்பாபு அவர்கள்.

அந்த வகையில், இன்றைக்கு இங்கு இரண்டு தொகுதிகளைச் சேர்ந்த பாக முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்து இருக்கிறார்.

### படைத்தலைவன்

போர் வருகிறது என்றால், ஒரு படைத்தலைவன் தன் வீரர்களை எல்லாம் தயார் செய்து போருக்கு அனுப்புவான். அப்போதுதான் வெற்றி வரும் என்று. அவர்களுக்குத் தேவையான அனைத்து பயிற்சிகளையும், பொருட்களையும் கொடுத்து, ஒரு போரில் தாக்குதல் எப்படி இருக்க வேண்டும், தடுத்தல் எப்படி இருக்க வேண்டும் என்று கற்றுக் கொடுத்து போருக்கு அனுப்பி வைப்பவன்தான் உண்மையான படைத்தலைவன். அப்படிப்பட்ட உண்மையான உங்களின் படைத்தலைவர் அண்ணன் சேகர்பாபு அவர்கள். இன்றைக்கு போர் வீரர்களாகிய உங்களை, உங்களுக்கு என்னென்ன தேவையோ அனைத்தையும் பார்த்து, பார்த்து செய்திருக்கிறார்.

நான் எப்போது சென்னை கிழக்கு மாவட்டத்திற்கு வந்தாலும், அவர் நடத்துகின்ற ஒவ்வொரு நிகழ்ச்சியும் என்னால் மறக்கவே முடியாது. ஒவ்வொரு நிகழ்ச்சியையும், இன்னொரு நிகழ்ச்சியைவிட சிறப்பாக, மனதைவிட்டு விலகாத மாதிரி நடத்துவார் அண்ணன் சேகர்பாபு அவர்கள். அப்படித்தான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியையும் நடத்தி இருக்கிறார். அதனால்தான் நம் தலைவர் அவர்கள் அண்ணன் சேகர்பாபுவை செல்லமாக செயல்பாபு என்று கூப்பிடுவார்.

நான் பலமுறை சொல்லி இருக்கிறேன். இவர் வெறும் செயல்பாபு கிடையாது, ‘சூப்பர் செயல்பாபு’ அண்ணன் சேகர்பாபு அவர்கள். இங்கு கிட்டத்தட்ட 1,200-க்கும் அதிகமான பூத் கமிட்டிகளைச் சேர்ந்த பாக நிர்வாகிகள் வந்திருக்கிறீர்கள். நீங்கள்தான் கழகத்தின் இரத்த நாளங்கள். கலைஞர் அவர்களுக்கு ஒரு தனிப்பெருமை உண்டு. இந்தியாவில் உள்ள எந்த தலைவருக்கும் அந்த பெருமை கிடையாது. அது என்ன பெருமை என்றால், கலைஞர் அவர்கள் நின்ற அனைத்து தேர்தல்களிலும் வென்ற ஒரே தலைவர் நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

### இந்தியாவிலேயே முதல் இயக்கம்

நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு பெருமை உண்டு. அவர் கழகத்தின் தலைவராக பொறுப்பேற்று சந்தித்த அத்தனை தேர்தல்களிலும் வெற்றிப்பெற்ற ஒரே தலைவர், நம் கழகத் தலைவர் அவர்கள். இந்தப் பெருமைகள் எல்லாம் பாக முகவர்கள் உங்களைத்தான் சேரும். நீங்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்கள வீரர்கள்.



இந்தியாவிலேயே முதன்முதலாக நாம்தான் தேர்தல் வேலைகளை ஆரம்பித்தோம். இன்றைக்கு பல இயக்கங்கள் பூத் கமிட்டியைக்கூட போட முடியாமல் திணறிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், நம் திராவிட முன்னேற்றக் கழகம் பூத் கமிட்டியை மட்டுமல்ல, ஒவ்வொரு பாகத்திற்கும் பூத் அளவில் டிஜிட்டல் ஏஜென்ட்டுகளை நியமித்த இயக்கம், இந்தியாவிலேயே முதல் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம், அதற்கு காரணம் நம் தலைவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 90 வயது வரைக்கும் ஃபேஸ் புக்கிலும், சமூக வலைதளங்களிலும், டிவிட்டரிலும் ஆக்டிவாக இருந்தார். இன்றைக்கு அவர் வழியில் வந்த நம் தலைவர் அவர்கள் தேர்தல் பணிகளையும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நவீனப்படுத்தியுள்ளார்.

சென்ற வாரம், திருவண்ணாமலையில் இதே போல் பாக முகவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அந்தக் கூட்டத்தில் பேசும்போது சொன்னேன். தேர்தல் பந்தயத்தில் யாரும் பிடிக்க முடியாத தூரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் முந்திக்கொண்டு சென்று கொண்டிருக்கிறது. எனவே, வெற்றி நிச்சயம் என்று சொன்னேன்.

அதற்கு முக்கியமான காரணங்கள். இந்த நான்கு ஆண்டுகளில் நம் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், நம் திராவிட மாடல் அரசு செய்திருக்கின்ற எண்ணற்ற திட்டங்களும், சாதனைகளும்தான் அதற்கு மிகமிக முக்கியமான காரணம்.

ஆட்சி பொறுப்பேற்றவுடன் நம் தலைவர் அவர்கள், முதலமைச்சரானவுடன் போட்ட முதல் கையெழுத்து மகளிருக்கான விடியல் பயணம் திட்டம்தான். இந்தத் திட்டத்தின் மூலம் இந்த நான்கு வருடங்களில் மட்டும் 732 கோடி பயணங்களை, தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் பயணம் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு மகளிரும் மாதந்தோறும் 800 ரூபாயிலிருந்து, 900 ரூபாய் வரை சேமிக்கிறார்கள்.

பெண்கள் பள்ளிக்கூடம் வரை படித்தால் போதாது, உயர்கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக தலைவர் அவர்கள் உருவாக்கிய திட்டம்தான் புதுமைப்பெண் திட்டம். அரசு பள்ளியில் படித்து, உயர்கல்வி படிக்க எந்த கல்லூரியில் சென்று படித்தாலும், உங்களுக்கு நான் தருகிறேன் மாதம் ஆயிரம் ரூபாய் என்று நம் தலைவர் அவர்கள் கொடுத்தார். அதற்கு பெயர்தான் புதுமைப்பெண் என்ற திட்டம்.

மாணவர்களுக்கும் அந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி தமிழ்ப்புதல்வன் திட்டத்தைச் செயல்படுத்தினார். இந்த இரண்டு திட்டங்களின் மூலம் நான்கு வருடத்தில் சுமார் 8 லட்சம் மாணவ, மாணவிகள் கல்வி ஊக்கத்தொகையைப் பெற்று இருக்கிறார்கள்.

பெற்றோர்களின் சிரமத்தைப் போக்கும் வகையில், நம் முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிய திட்டம்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இன்றைக்கு வேலைக்குச் செல்கின்ற பெற்றோர்கள் குழந்தைகளை மகிழ்ச்சியாக, வாழ்த்தி குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள்.

என் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கு நம் முதலமைச்சர் இருக்கிறார், நம் அரசு இருக்கிறது. காலையில் பள்ளிக்கூடத்திற்கு வந்தால், முதலில் தரமான காலை உணவு, அதன்பிறகு தரமான கல்வி வழங்கப்படுகிறது.

### திரும்பிப் பார்க்கின்ற திட்டம்

இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவுமே திரும்பிப் பார்க்கின்ற திட்டம், எதிர்கட்சிகள் எல்லாம் செயல்படுத்தவே முடியாது என்று சொன்ன திட்டம், நம் தலைவர் அவர்கள் செய்து காட்டினார். அதுதான் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம். கடந்த 23 மாதங்களாக ஒரு கோடியே 15 லட்சம் மகளிர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கொடுத்து இருக்கிறோம். ஒவ்வொரு மகளிருக்கும் கிட்டத்தட்ட 23 ஆயிரம் ரூபாய் கொடுத்து இருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். அதில் சில பேருக்கு வரவில்லை என்று குறைகள் இருக்கின்றன. அதையெல்லாம் நிவர்த்தி செய்யத்தான் கடந்த 15-ஆம் தேதி நம் முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் என்ற சிறப்பு முகாம் மூலமாக புதிதாக விண்ணப்பங்களைப் பெற உத்தரவிட்டார். அதில் இருந்த விதிகள் சிலவற்றைத் தளர்த்திவிட்டார். ஆகவே விதிகளைப் பூர்த்தி செய்கின்ற அத்தனை மகளிருக்கும் நிச்சயம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை விரைவில் நம் முதலமைச்சர் அவர்கள் வழங்குவார்.

இப்படிப் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன.ஆனால், இந்த நான்கு திட்டங்களும் மக்களிடம் பெரும் வரவேற்பை நம் முதலமைச்சருக்கும், நமது அரசுக்கும் பெற்று தந்து இருக்கின்றன. இவற்றையெல்லாம் நீங்கள் தமிழ்நாட்டு மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்.

முந்தைய அடிமைகளின் ஆட்சியில், பாதாளத்தில் இருந்த தமிழ்நாட்டின் வளர்ச்சி, இன்றைக்கு நம் திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களால் 9.69 சதவிகித வளர்ச்சியுடன் முதல் இடத்தில் இருக்கிறது. இதைச் சொல்வது நான் இல்லை, ஒன்றிய அரசின் புள்ளிவிவர கணக்கு சொல்கிறது.

இதையெல்லாம் நீங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்லச் சொல்ல அடிமைகளுக்கும், பாசிஸ்ட்டுகளுக்கும் பதற்றம், வயிற்றெரிச்சல் அதிகமாகிக்கொண்டே செல்கிறது. அதனால்தான் அவர்களால் தமிழ்நாட்டிற்குள் கால் ஊன்ற முடியவில்லை.

எப்படியாவது காவிக்கு இங்கு பாதை அமைத்துக் கொடுக்க வேண்டும் என அ.தி.மு.க. முயற்சி செய்துகொண்டு இருக்கிறது. கருப்பு - சிவப்பு வேட்டி அணிந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இருக்கின்றவரைக்கும் தமிழ்நாட்டிற்குள் காவியை, தமிழ்நாட்டு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். அதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

> **ஒவ்வொரு பூத்துக்கும் உட்பட்ட வீடுகளுக்கு தினசரி செல்லுங்கள். அவர்களின் குடும்பத்தில், ஒருவராக மாறுங்கள். அவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக மாறுங்கள். அவர்களின் பிரச்சினைகளைக் கேளுங்கள். உங்களால் செய்ய முடிந்தால் அதைச் செய்து கொடுங்கள். உங்களால் செய்ய முடியவில்லை என்றால், உங்களின் மாவட்டக் கழகச் செயலாளரிடமோ, சட்டமன்ற உறுப்பினரிடமோ அந்தப் பிரச்சினையைச் சொல்லி தீர்வு காண முயற்சி செய்யுங்கள். ஒரு வாக்குக்கூட தவற விடக்கூடாது. ஏனென்றால் இது மிகமிக முக்கியமான தேர்தல்.**

தமிழ்நாட்டிற்குள் நுழைந்து, தமிழ்நாட்டின் உரிமைகளை எப்படியாவது பறித்துவிட முடியாதா என்று தொடர்ந்து போராடிக்கொண்டு இருக்கிறார்கள்.

### நிதி உரிமையைக் கொடுத்தார்களா?

தமிழ்நாட்டிற்கு நியாயமாகச் சேர வேண்டிய நிதி உரிமையைக் கொடுத்தார்களா என்றால், அதுவும் கிடையாது. குறிப்பாக, நம் பிள்ளைகளின் கல்விக்காக சேர வேண்டிய நிதியைக் கேட்டால், நீங்கள் மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் அந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டால், தமிழ்நாட்டு பள்ளிக்கல்வித் துறைக்குத் தர வேண்டிய 2 ஆயிரத்து 150 கோடியைத் தருகிறோம் என்று ஒன்றிய அமைச்சர் வெளிப்படையாகவே சொன்னார்.

ஆனால், நம் முதலமைச்சர் அவர்கள் நீங்கள் 10 ஆயிரம் கோடி கொடுத்தாலும், உங்கள் மும்மொழிக் கொள்கையை, தமிழ்நாட்டுக்குள் அனுமதிக்க மாட்டேன் என்று தைரியமாக இந்தியாவிலேயே முதன்முறையாகச் சொன்ன ஒரே முதலமைச்சர் நம் தலைவர் அவர்கள்.

சென்ற கல்வியாண்டில், தமிழ்நாட்டின் கல்விக்காக ஒரு ரூபாய்கூட ஒதுக்கவில்லை ஒன்றிய பா.ஜ.க. அரசு. ஆனால், பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்களுக்கு மட்டும் கல்விக்காக அள்ளி, அள்ளி கொடுத்து இருக்கிறார்கள்.

உதாரணத்துக்கு உத்தரபிரதேசம் மாநிலத்திற்கு 6 ஆயிரத்து 264 கோடி ரூபாயும், அசாம் மாநிலத்துக்கு 2 ஆயிரத்து 25 கோடி ரூபாயும், ஆந்திர பிரதேசத்துக்கு 1,250 கோடி ரூபாயும் ஒதுக்கி இருக்கிறது ஒன்றிய அரசு. ஆனால், தமிழ்நாட்டிற்கு ஒரு பைசா கூட ஒதுக்கவில்லை ஒன்றிய அரசு. இப்படி தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக்காக ஒரு ரூபாய்கூட ஒதுக்காத பா.ஜ.க. வுடன்தான் இன்றைக்கு அ.தி.மு.க அடிமைக் கூட்டம், கூட்டணி வைத்து இருக்கிறார்கள்.

### தொகுதி மறுவரையறை

தொகுதி மறுவரையறை என்று சொல்லி, தமிழ்நாட்டில் இருக்கின்ற 39 மக்களவைத் தொகுதிகளை, 31 தொகுதியாக குறைப்பதற்கான முயற்சியிலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு ஈடுபட்டு இருக்கிறது. இதையெல்லாம் எதிர்த்து குரல் கொடுக்கின்ற ஒரே தலைவர் நம் தலைவர் அவர்கள், நம் முதலமைச்சர் என்பதை நீங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும். இப்படி பல்வேறு பிரச்சினைகளை, நம் மாநிலத்திற்கும், நம் தமிழ்நாட்டு மக்களுக்கும் கொடுக்கின்ற தமிழக விரோத பா.ஜ.க. வுடன் எடப்பாடி பழனிச்சாமி மறுபடியும் கூட்டணி வைத்துள்ளார். சென்ற தேர்தலில், எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், ‘இந்த தேர்தல் கிடையாது, 2035-லும் நாங்கள் என்றைக்கும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்க மாட்டோம் என்று சொல்லிவிட்டு, இரண்டு மாதத்திற்கு முன்பு, டெல்லிக்கு சென்று, நான்கு கார்கள் மாறிச் சென்று, ஒளிந்து, மறைந்து சென்று கூட்டணி வைத்துவிட்டு வந்திருக்கிறார்.

இந்த துரோக கூட்டணியை வீழ்த்த வேண்டிய பொறுப்பு தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்து வாக்காளருக்கும் இருக்கிறது. அதனால்தான் நம் தலைவர் அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு என்ற முன்னெடுப்பை தொடங்கி வைத்தார்கள். இந்த நேரத்தில் இன்னொரு மகிழ்ச்சியான செய்தியையும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பைப் பற்றி அண்ணன் என்.ஆர்.இளங்கோ பேசும் போது சொன்னார். நீங்கள் ஒவ்வொரு வீடாக ஏறி, இறங்கி கொண்டு இருக்கிறீர்கள். இளைஞர் அணியினர், தகவல் தொழில்நுட்ப அணியைச் சேர்ந்தவர்கள், மகளிர் அணியினர், கழகத்தின் நிர்வாகிகள் இந்த முன்னெடுப்பைக் களத்தில் செய்துகொண்டு இருக்கிறீர்கள்.

ஒவ்வொரு வீட்டு படிக்கட்டையும் ஏறி, இறங்கி உறுப்பினர்களைச் சிறப்பாக சேர்த்துள்ளீர்கள். இன்றைய தேதியில் இன்று வரைக்கும் நம் கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களைச் சேர்த்து இருக்கிறோம். இன்னொரு சிறப்பை உங்களிடம் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். சட்டமன்றத் தேர்தல் நிர்வாக வசதிக்காக 8 மண்டலங்களாக தலைவர் அவர்கள் பிரித்து இருக்கிறார்கள். அதில் இந்த சென்னை மண்டலத்தில் மொத்தம் 30 தொகுதிகள்.

### ஓரணியில் தமிழ்நாடு

இந்த 30 தொகுதிகளில் ஓரணியில் தமிழ்நாடு என்ற கழகத்திற்கான உறுப்பினர் சேர்க்கையில் முதல் 10 தொகுதிகளில் கிழக்கு மாவட்டத்தின் 6 தொகுதிகளும் வந்துள்ளன. அந்த 30 தொகுதிகளில் முதல் இடத்தில் கொளத்தூர் தொகுதி இருக்கிறது. இரண்டாவது இடத்தில் துறைமுகம் தொகுதி இருக்கிறது. துறைமுகம் தொகுதி முதல் இடத்திற்கு முயற்சி செய்ய வேண்டும். மூன்றாவது இடத்தில் திரு.வி.க. நகர் தொகுதியும், நான்காவது இடத்தில் எழும்பூர் தொகுதியும், ஆறாவது இடத்தில் வில்லிவாக்கம் தொகுதியும், எட்டாவது இடத்தில் அம்பத்தூர் தொகுதியும் இருக்கிறது. என் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி 9-வது இடத்தில் இருக்கிறது. நானும் முதல் இடத்திற்கு வருவதற்கு முயற்சி செய்கிறேன். நமக்குள் இந்தப் போட்டி இருக்க வேண்டும். இன்னும் 30 நாட்களில் யார் முதல் இடத்திற்கு வருகிறார்கள் என்பதைப் பார்ப்போம்.

இது ஏதோ நாம் மிஸ்டுகால் கொடுத்து சேர்க்கவில்லை. மிஸ்டுகால் கொடுத்து ஆள் சேர்க்கின்ற கட்சி நம் கட்சி கிடையாது. நம் சொந்தக் காலை நம்புகின்ற கட்சி நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

ஏனென்றால் நாம் தேர்தல் எண்ணிக்கைக்காகவோ, வாக்காளர்களுக்காகவோ உறுப்பினர்களைச் சேர்க்கவில்லை. தமிழ்நாட்டின் மண்-மொழி-மானம் காக்க ஓரணியில் தமிழ்நாடு என்று கழகத்திற்கு கீழ், நம் தமிநாட்டு குடும்பங்களைச் சேர்த்துக்கொண்டு இருக்கிறோம்.

### உங்களால் சந்திக்க முடியுமா?

இது புரியாமல் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் எல்லா இடத்திற்கும் சென்று பேசிக் கொண்டு இருப்பதைப் பார்த்து இருப்பீர்கள். அவர் பேருந்தில் சுற்றிக்கொண்டு இருக்கிறார். எடப்பாடிப பழனிச்சாமி அவர்கள், தி.மு.க தேர்தல் வந்தவுடன் தமிழ்நாட்டு மக்களின் வீட்டுக் கதவுகளை எல்லாம் தட்டுகிறது என்று விமர்சனம் செய்திறார். அதற்கு ஏற்கனவே பதில் சொன்னேன். எடப்பாடி பழனிச்சாமி அவர்களே நாங்கள் ஒன்றும் உங்களை மாதிரி அமித்ஷா வீட்டுக் கதவையோ, கமலாலயம் கதவையோ திருட்டுத்தனமாக சென்று தட்டவில்லை. எங்கள் தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்து இருக்கின்ற திட்டங்களின் உரிமையுடன் சென்று ஒவ்வொரு வாக்காளரையும் தைரியமாக சென்று சந்தித்துக் கொண்டு இருக்கிறோம். உங்களால் சந்திக்க முடியுமா?

எனவே தி.மு.க தலைமையில் இருக்கின்ற கூட்டணி என்பது வெறும் தேர்தல் கூட்டணி அல்ல. அது கொள்கைக் கூட்டணி என்பதை நீங்கள் உணர வேண்டும். எனவே, நிச்சயம் நம்முடைய கூட்டணிதான் வெற்றிபெறும். நம் தலைவர் அவர்கள்தான் அடுத்த முதலமைச்சராக உட்கார போகிறார்.

ஏனென்றால், எடப்பாடி பழனிசாமியின் கட்டுப்பாட்டில் அ.தி.மு.க-வே கிடையாது. இப்படிப்பட்ட அடிமைகளையும், பாசிஸ்ட்டுகளையும் நாம் நிச்சயம் வீழ்த்த வேண்டும். அந்த முக்கியமான பொறுப்பு, பூத் கமிட்டி நிர்வாகிகளான உங்கள் கைகளில்தான் இருக்கிறது.

### ஒரு பூட்டு, ஒரு சாவி, ஒரு சுத்தியல்

ஒவ்வொரு பூத்துக்கும் உட்பட்ட வீடுகளுக்கு தினசரி செல்லுங்கள். அவர்களின் குடும்பத்தில், ஒருவராக மாறுங்கள். அவர்களின் நம்பிக்கைக் குரியவர்களாக மாறுங்கள். அவர்களின் பிரச்சினைகளைக் கேளுங்கள். உங்களால் செய்ய முடிந்தால் அதை செய்து கொடுங்கள். உங்களால் செய்ய முடியவில்லை என்றால், உங்களின் மாவட்டக் கழகச் செயலாளரிடமோ, சட்டமன்ற உறுப்பினரிடமோ அந்தப் பிரச்சினையைச் சொல்லி தீர்வு காண முயற்சி செய்யுங்கள். ஒரு வாக்குக்கூட தவற விடக்கூடாது. ஏனென்றால் இது மிகமிக முக்கியமான தேர்தல்.

தமிழ்நாட்டின் மண்-மொழி-மானம் காப்பதற்கான தேர்தல். அதை உணர்ந்து நீங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நேரத்தில் ஒரு சின்ன கதையைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பூட்டப்பட்ட பூட்டு, ஒரு சாவி, ஒரு சுத்தியல். பூட்டப்பட்ட இந்தப் பூட்டைத் திறப்பதற்காக சுத்தியல் எவ்வளவோ முயற்சி செய்தது. அந்தப் பூட்டின் தலையில் ஓங்கி, ஓங்கி அடித்தது. ஆனால், அந்தப் பூட்டு திறக்கவே இல்லை. ஆனால், அந்த சாவி மிகவும் சுலபமாக உள்ளே சென்று பூட்டைத் திறந்துவிட்டது. அப்போது, அந்த சுத்தியல், சாவியைப் பார்த்து கேட்டது, நான் உன்னை விட இவ்வளவு பெரிதாக இருக்கிறேன். உன்னைவிட பலசாலியாக இருக்கிறேன். நான் எவ்வளவோ முயற்சி செய்தும் அந்தப் பூட்டை திறக்கவே முடியவில்லை. நீ மட்டும் எப்படி இவ்வளவு சுலபமாக அந்த பூட்டைத் திறந்தாய் என்று சுத்தியல், சாவியைப் பார்த்து கேட்டது.

அப்போது அந்த சாவி சொல்லியது. நீ, பூட்டின் தலையில் ஓங்கி அடிக்கிறாய், அதனால் உன்னை பூட்டுக்கு பிடிக்கவே, பிடிக்காது. ஆனால், நான் பூட்டின் இதயத்தைச் சென்று தொடுகிறேன். அதனால்தான், என்னால் மிகவும் சுலபமாக பூட்டைத் திறக்க முடிந்தது என்று சாவி, சுத்தியலிடம் சொன்னது.

இங்கு நான் பூட்டு என்றுச் சொன்னது நம் தமிழ்நாடு. சுத்தியல் என்று சொன்னது ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு. சாவி என்பது நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள். எனவே, பா.ஜ.க என்கிற சுத்தியல், இந்தித் திணிப்பு, தொகுதி மறுவரையறை, மொழி உரிமை பறிப்பு, நிதி உரிமை மறுப்பு என்று எவ்வளவுதான் ஓங்கி, ஓங்கி தலையில் அடித்தாலும், அதனால் தமிழ்நாட்டின் இதயத்தை தொட்டுக்கூட பார்க்க முடியாது. காரணம், தமிழ்நாட்டின் இதயத்தை தொடுகின்ற கழகம் என்னும் சாவியை பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், நம் தலைவர் அவர்களின் கரங்களில் ஒப்படைத்து சென்றுள்ளார்கள். ஆகவே, இங்கு சங்கிகளும், அடிமைகளும் ஒரு நாளும் வெல்ல முடியாது.

நம் தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்து இருக்கிறார். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு. 200 தொகுதிகளில் வெற்றிப்பெற்று காட்ட வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். 200 இல்லை 200-க்கு மேலான தொகுதிகளில் நாம் வெற்றிப்பெற்று காட்ட வேண்டும். அதன் தொடக்கமாக சென்னை கிழக்கு மாவட்டத்தில் இருக்கின்ற துறைமுகம், எழும்பூர் தொகுதியின் வெற்றி அமைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

2026-ல் கழகத்தை 7-வது முறை ஆட்சி கட்டிலில் அமர வைக்க வேண்டும் என்றால், நம் தலைவர் அவர்களைத் தொடர்ந்து 2-வது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைக்க வேண்டும் என்றால், நாம் அத்தனைப் பேரும் இன்றிலிருந்து அயராது உழைப்போம் என்று உறுதி எடுத்துக்கொள்வோம்.

தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும். பாக நிர்வாகிகள் அத்தனை பேருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், என்.ஆர். இளங்கோவன், மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வழக்கறிஞர் பரந்தாமன், வெற்றியழகன், அணிகளின் மாநில நிர்வாகிகள் கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, ஷேக் அப்துல்லா, உமாகாந்த், பரிதி இளம்சுருதி, வழக்கறிஞர் சந்துரு, சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர்கள் நரேந்திரன், மருத்துவர் யாழினி, தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், புனிதவதி எத்திராசன், தேவன், ஆசாத், பகுதிக் கழகச் செயலாளர்கள் முரளி, ராஜசேகர், சுதாகர், வேலு, ஐ.சி.எஃப்.முரளி, நாகராஜன், வாசு, கு.பி.ஜெயின், டி.எஸ்.பி.ராஜகோபால், நாகராஜ், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், கே. எஸ்.எம்.நாதன், பொதுக்குழு உறுப்பினர்கள் கனி, கலைச்செல்வி, கோ.மணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஸ்ரீராமலு, பி. கே.மூர்த்தி, சரிதா மகேஷ்குமார், மருத்துவர் சாந்தகுமாரி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஜெகதீஷ், சங்கர் நானா, வினோத், தனசேகரன், மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுந்தர்ராஜன், ராஜேஷ் ரங்கீலா, பரிமளம், வட்டக்கழகச் செயலாளர்கள் கவியரசு, பார்த்திபன், உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.